
www.newwisdomministries.com

# ஞா
# ன
# ஒ
# லி

# அன்பும், நேர்மையும் வலிமையானது ஆனால் வலி நிறைந்தது





ஞானம் 07 – ஒலி 12 – 24.03.2024

# ஆசிரியர் பக்கம்



ஞான ஒலி என்னும் இணைய இதழின் பெருமைமிகு நல்ல வாசகப் பெருமக்களே, உங்கள் அனைவருக்கும் புனித வார அருள் வளங்கள் அளவில்லாமல் கிடைக்கவும், இயேசுவின் முழுப் பரிமாணத் தரிசனமும் கிடைக்க, அதனால் உங்கள் கிறிஸ்துவ அர்ப்பணிப்பும் வளம் பெற வாழ்த்துகின்றேன்.

கடவுள் நேர்மையாளர்களை அதிகமாக நேசிக்கின்றார். அவர்கள்மீது தனிக் கவனம் கொண்டு, அவர்களுக்குத் தன்னை வெளிப்படுத்துகின்றார் என்று திருவிவிலியம் கூறுவதை நாம் படித்திருப்போம். நேர்மையும்,, உண்மையும் கொண்டவர்கள் கடவுளை நேரிலேயே பார்க்கும் அருளைப் பெறுகினறார்கள் என்ற இந்தப் பேருண்மை நமக்கு, நேர்மையின் பண்பில் ஈர்ப்பு வருவதைத் தவிர்க்க முடியாது. காரணம் மனிதப் பிறவியின் இறுதி நோக்கமே கடவுளை நாம் இந்த மண்ணகத்திலேயேக் காண வேண்டும் என்பதுதான்.

நீதியுள்ள ஆண்டவர் நேரிய செயல்களை விரும்புகின்றார். அவர்தம் திருமுகத்தை நேர்மையாளர் காண்பர்.-திருப்பாடல் 11/ 7

நானோ நேர்மையில் நிலைத்திருந்து,
உமது முகம் காண்பேன்.
விழித்தெழும்போது உமது உருவம் கண்டு நிறைவு பெறுவேன். -திருப்பாடல் 17/15.

ஆகவேதான் நேர்மையாய் இருப்பது ஆன்மீகத்தின் ஆணிவேர் என்பதை இந்த இறைவசனங்கள் தெளிவாகின்றது. சாதாரண மனிதர்களுக்குத்தான் என்றில்லை. இறைமகன் மனிதனாய் பிறந்தபிறகு, அந்த விதி அவருக்கும் பொறுந்துகிறது என்பதுதான் விசித்திரம். இதன் மூலம் இயேசு முழு மனித நிலையில்தான் இந்த பாடுகளை அனுபவித்தார், அதோடு மட்டுமல்ல, இந்த மனித நிலையிலிருந்து, மீண்டும் அந்த இறைநிலையை அடைவதற்கு அவருக்கும், இந்த நேர்மைதான் பெருவழியாக அமைந்தது. புனித பவுலடியார் தான் பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தில், இயேசு தன் இறைமகனின் மகிமையையும், மனிதகுல மீட்புக்காக எவ்வாறு துறந்தார், மீண்டும் அந்த இறைமகன் என்ற அந்த இறைநிலையை அடைய எவ்வளவு துன்பப்பட்டார் என்பதை பிலிப்பியர் 2ம் அதிகாரம் 6முதல் 11ம் இறைவசனங்கள் கூறுவதை நாம் படித்திருப்போம்.

இறைவனை நேரில் பார்ப்பதைவிட, அந்த இறைநிலையைப் பெற, இயேசு அத்தனைப் பாடுகளையும் அனுபவிக்க வேண்டியிருந்தது.

மனித மீட்புக்காக இறைமகனின் தியாகப் பலி, பழைய ஏற்பாட்டுப் பாஸ்கா ஆட்டுப் பலிக்குப் பதிலாக அமைவதே இறைத்திட்டம் என்பதை ஏற்று அதை நிறைவேற்ற உலகில் மனிதனாக வந்த இயேசு, ஆரவாரத்தோடும், ஆனந்தக் களிப்போடும், ஆர்ப்பரிப்போடும் கலிலேயாவில் தொடங்கியனார். ஆனால் எருசலேமில் அவரது பாடுகளின் இறுதி நிமிடங்களில், இறைத் தந்தைக்கு உலக மக்களின் மீட்புக்காக தன்னைப் பலிகொடுப்பதாக வாக்களித்த இயேசுவின் நேர்மை தள்ளாடுகின்றது. அவருக்கு மனித பயமும், பலவீனமும் தலைதூக்கித் தடுமாறி தனது வாக்குறுதியிலிருந்து பின் வாங்குகின்றார்.

நீங்கள் பேசும்போது, ஆம் என்றால் ஆம் எனவும், இல்லை என்றால் இல்லை எனவும் சொல்லுங்கள். இதைவிட மிகுதியாகச் சொல்வது எதுவும் தீயோனிடமிருந்து

வருகிறது. – மத்தேயு 5/37

இவ்வாறு சொன்ன இயேசு, ஆம் என்று சொன்ன தன் மனதில் இல்லை என்ற இறைவிரோத எண்ணம் தலைதூக்கி, இறைவனிடம், தான் கொடுத்த வாக்குறுதியை நீர்த்துப்போக வைக்கும் மனநிலையில் தவிக்கின்றார்.

தனது பொதுவாழ்வை ஆரம்பிக்கும்முன், நாற்பது நாள் பாலைவனத்தில் உண்ணா நோன்பு இருந்த இறுதியில், தன்னை சோதித்த சாத்தானை இறைவார்த்தை கொண்டு ஓட ஓட விரட்டியவர், கெத்சேமேனித் தோட்டத்தில் மனித பலவீனத்தின் காரணமாக தனது நேர்மைக்கு வந்து சோதனையில் பின்வாங்கப் பார்க்கின்றார். இறைவனிடம் அந்தத் துன்பக் கலத்தை அகற்றிவிடும்படி மன்றாடுகின்றார்.

ஏதேன் தோட்டத்து பழைய ஆதாம் கடவுள் தவர்க்க வேண்டும் என்ற மரத்தின் கனியை சாப்பிட மாட்டேன் என்று சொன்ன தனது நேர்மையிலிருந்து அவனது மனைவியின் நப்பாசையால், தவறி பேரிழப்பை மனித குலத்துக்கு தந்ததால், இறைமகன் அந்த பேரிழப்பிலிருந்து மனித குலத்தை மீட்க அவர் கொடுத்த வாக்குறுதியின் நேர்மைக்கு வந்த சோதனையில் தள்ளாடுகின்றார். பழைய ஆதாம் சக மனுஷியால் தவறிழைத்தார், ஆனால், இயேசு தன் மனித பலவீனத்தால், தள்ளாடுகின்றார்.

இறைத்தந்தை சாதாரணமானவர் அல்ல என்பதை இறைமகனே மனித சுபாவத்தில் அறியத் தவறுகின்றார். இறைத்தந்தை தனது மீட்புத் திட்டத்திலும், செயலிலும் எவ்வளவு நேரியர், உண்மையுள்ளவர் என்பதை எரேமியா புத்தகம் அதிகாரம் 32, 19ம் இறைவசனம் கூறுவதை இங்கு படிப்போம்.

மாபெரும் ஆற்றல்மிகு இறைவா,
படைகளின் ஆண்டவர் என்பதே உமது
பெயராகும். நீர் திட்டமிடுவதில் பெரியவர்,
செயலில் வல்லவர்.

இயேசு கெத்சேமேனித் தோட்டத்தில் அப்பா, தந்தையே எல்லாம் உம்மால் இயலும், இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும் என்று கெஞ்சுகின்றார்.... ஆனால், பரிசுத்த பரலோகத் தந்தை, தான் திட்டமிடுவதில் பெரியவரும், செய்யத் திட்டமிட்டதைச் செயல்படுத்துவதில் வல்லவராய் இருப்பதால், அவர் தன் மகனின் கதறலுக்குக்கூட, தன் மக்களின் மீட்புக்காக, எந்த ஒப்புதலும் கொடுக்காமல் மௌனமாக இருக்கிறதை உணர்ந்த இயேசு, தன் தந்தையின் உள்ளத்தின் உறுதியை அறிந்து, தனது நேர்மையான வாக்குறுதிக்கு வந்த சோதனையில் வெற்றி கொள்வதற்காக, அவர் தொடர்ந்து இவ்வாறு செபிக்கின்றார்.... ஆனாலும், என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும் என்று கூறினார். (மாற்கு 14/36) அதன்மூலம் மீண்டும் இறைமகன் என்று மகிமையைப் பெறும் போராட்டத்திற்குத் தயாரானார். அதில் கல்வாரி சிலுவையில் தன் உயிரை இறைத்தந்தையின் கையில் ஒப்படைத்ததன் மூலம் (லூக்கா 23/46) தன் நேர்மையின் பரிசாக, இறைவனை நேரில் சந்திக்கவும், அவரது மகனாய் மீண்டும் இறையரசாட்சியைப் பெறவும் மகியுற்றார் என்பதை பிலிப்பியர் 2ம் அதிகாரத்தில் 9 முதல் 11ம் வசனங்கள் அழகாக எடுத்துரைக்கின்றது.

எனவே, கடவுளும் அவரை மிகவே உயர்ந்தி,
எப்பெயருக்கும் மேலான பெயரை
அவருக்கு அருளினார்.
ஆகவே இயேசுவின் பெயருக்கு
விண்ணவர், மண்ணவர், கீழுலகோர்,
அனைவரும் மண்டியிடுவர். தந்தையாம்
கடவுளின் மகிமைக்காக
இயேசு கிறிஸ்து ஆண்டவர் என
எல்லா நாவுமே அறிக்கையிடும்.

கல்வாரியில் இயேசு போதித்த இறையன்பு, பிறரன்பு நற்செய்தியோடு, நேர்மையாளருக்குக் கிடைக்கும் பரிசு பற்றியும் கற்றுத் தந்திருக்கின்றார். நமது இறை நம்பிக்கையின் நேர்மையால் மீட்பும், பேரின்ப வாழ்வையும் பெறுவோம். ஆமென்.



# விவிலியம் அறிவோம்




மோசேக்குப் பிறகு இஸ்ரயேல் மக்களின் தலைவராகச் செயல்பட்ட யோசுவா இந்நூலின் கதாநாயகனாக இருப்பதால் இந்நூலுக்கு யோசுவா என்ற பெயர் வந்தது. இந்நூல் யோசுவாவின் வரலாற்றையும், எவ்வாறு யோசுவா இஸ்ரயேல் மக்களை வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் அழைத்துச் சென்றார், நாட்டை எவ்வாறு கைப்பற்றினார், இஸ்ரயேல் மக்களைக் குடியேறச் செய்தார் என்பனவற்றை எடுத்துரைக்கிறது. யோசுவா என்ற பெயருக்கு ஆண்டவர் மீட்கிறார் என்பது பொருள். விவிலியத்தில் பலருடைய பெயர்கள் மாற்றப்பட்டு புதிய பெயர்களால் அழைக்கப்படுவதைப் பார்க்கிறோம். உதாரணமாக, தந்தை உயர்ந்தவர் அல்லது கடவுள் உயர்ந்தவர் என்ற பொருள் கொண்ட அபிராம் என்ற பெயர் பல நாடுகளின்; தந்தை என்ற பொருள் கொண்ட ஆபிரகாம் என கடவுளால் மாற்றப்படுகிறது. அபிராமின் மனைவியான சாராய் (என் இளவரசி ஒரு குடும்பத்திற்குள் அடங்கிய ஆதிக்கம்) சாரா (இளவரசி)எனப் பெயர் மாற்றம் செய்யப்படுகிறார். அதைப்போல ஏமாற்றுபவன் என்ற பொருள் கொண்ட யாக்கோபு என்ற பெயர் கடவுளைக் காண்பவர் அல்லது கடவுளால் ஆளப்படுபவர் என்ற பொருள் கொண்ட இஸ்ரயேல் எனப்பெயர் மாற்றம் செய்யப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் இறைவார்த்தையைக் கேட்பவர் என்ற பொருள் கொண்ட சீமோன் என்ற பெயர் பாறை என்ற பொருள் கொண்ட பேதுரு என இயேசுவால் பெயர் மாற்றம் செய்யப்படுகிறார். அதைப்போல யோசுவாவும் மாற்றம் செய்யப்பட்ட பெயர். தொடக்கத்தில் இவர் ஓசெயா என அழைக்கப்பட்டார் ஓசெயா என்ற பெயருக்கு மீட்பு என்பது பொருள்.; மோசே ஓசெயா என்ற பெயரை யோசுவா என மாற்றுகிறார் (எண் 13:8, 16). இந்நூலில் யோசுவா நூனின் மகன் யோசுவா எனப் பதிவுசெய்யப்படுகின்றார் ஆனால் அவரது தந்தைபற்றிய பதிவுகள் எதுவும் நூலில் இல்லை.

இஸ்ரயேலின் ஏனைய தலைவர்களிலிருந்து யோசுவா தனித்துவம் வாய்ந்தவர். ஆண்டவரின்

ஊழியரான மோசேயுடன் சீனாய் மலையின் உயரமான இடத்திற்கு யோசுவா மட்டுமே ஏறுவதற்கு வாய்ப்பு கிடைத்தது (விப 24:13). குருவான ஆரோன் அல்லது வேறு எந்தத் தலைவர்களுக்கும் அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. மோசே மலையிலிருந்து இறங்கும்வரை யோசுவா அவருக்காகக் காத்திருக்கிறார் (விப 32:17). அதுமட்டுமல்ல மோசேயின் உதவியாளர் என்ற முறையில் மோசேயுடன் சந்திப்புக் கூடாரத்திற்குள் செல்லும் வாய்ப்பு யோசுவாவிற்கு மட்டுமே கிடைக்கிறது (விப 33:11). இஸ்ரயேல் மக்களின் நீண்டகாலத் தலைவராகச் செயல்பட்டவர் மோசே. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரயேல் மக்கள் விடுதலை பெறுவதற்குக் காரணமாக இருந்தவர். சீனாய் மலையில் கடவுள் மக்களோடு ஏற்படுத்திய உடன்படிக்கைக்கு நடுநிலையாளராகச் செயல்பட்டவர்; கடவுளின் சட்டங்களை மக்களுக்குப் பெற்றுத் தந்தவர். மக்களின் தலைவராகச் செயல்பட்ட மோசேயின் இறப்பிற்குப்பின் இஸ்ரயேல் மக்களை வழிநடத்துகின்ற தலைவராக யோசுவா கடவுளால் தேர்ந்தெடுக்கப்படுகிறார் (எண் 27:18-23). அவருடைய தலைமைத்துவத்தைப் பற்றிக் குறிப்பிடும் இணைச்சட்ட நூல், நூனின் மகனாகிய யோசுவாவின் மேல் மோசே தம் கைகளை வைத்ததால், அவர் ஞானத்தின் ஆவியால் நிரப்பப் பெற்றிருந்தார். இஸ்ரயேல் மக்கள் யோசுவாவுக்குச் செவிகொடுத்து, மோசேக்கு ஆண்டவர் கட்டளையிட்டபடி நடந்தார்கள் (இச 34:9) எனக் குறிப்பிடுகிறது.

தொடக்கத்திலிருந்தே மோசேயுடன் பயணித்த அவர் கானான் நாட்டை உளவு பார்ப்பதற்காக அனுப்பப்பட்ட பன்னிருவருள் ஒருவர். காலேபுடன் இணைந்து கானான் நாட்டை வெற்றிகொள்ள முடியும் எனக் கூறியவர் (எண் 13-14). மோசக்கும் யோசுவாவுக்கும் பலவிதங்களில் மிகுந்த வேறுபாடுகள் இருந்தாலும் மோசேக்குப் பிறகு மக்களை வழிநடத்தத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார் (யோசுவா 1:1-9). மோசேயுடன் கடவுள் இருந்து செயல்பட்டதைப்போல யோசுவாவுடனும் கடவுள் இருந்து செயல்பட்டார் என்பதை இந்நூல் பல இடங்களில் பதிவுசெய்கிறது (யோசுவா 1:9, 16-18; 3:7; 4:14; 6:27; 10:14; 11:15, 23). பணி வாழ்வின் தொடக்கத்தில் இஸ்ரயேல் மக்கள் அனைவரும் யோசுவாவுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதாக வாக்களிக்கின்றனர் (1:16-18); அவரது வாழ்வின் இறுதி நேரத்தில் யோசுவாவின் சவாலுக்குக் கீழ்ப்படிந்து நாங்கள் ஆண்டவரைப் பின்பற்றி வாழ்வோம் என வாக்குறுதி கொடுக்கின்றனர் (யோசுவா 24:16-18). இந்நூலில் யோசுவா அதிகாரம் கொண்டவராகப் பேசுகிறார்; செயல்படுகிறார். மோசேயைப் போல தனது வார்த்தைகளில் திடமானவராக, உறுதியானவராக இருக்கின்றார் (யோசுவா 22-24). இந்நூலின் தொடக்கத்தில் மோசே ஆண்டவரின் ஊழியர் எனவும்

யோசுவா மோசேயின் உதவியாளர் எனவும் அறிமுகப்படுத்தப்படுகின்றனர் (யோசுவா 1:1) ஆனால் நூலின் இறுதியில் யோசுவா ஆண்டவரின் ஊழியர் (யோசுவா 24:29) என அறியப்படுகின்றார். இதிலிருந்து யோசுவா மோசேயின் வாரிசாக, ஆண்டவரின் ஊழியராகச் செயல்படத் தகுதியுள்ளவர் என்பது தெரிகிறது (காண்க இச 34:9). புதிய ஏற்பாட்டில் யோசுவாவைப் பற்றிய குறிப்புகள் இரண்டு இடங்களில் வருகின்றன: திப 7:45; எபி 4:8.

யோசுவா நூலை எழுதியவர் யாரெனத் தெளிவாகத் தெரியவில்லை. தால்மூது மற்றும் ஒரு சில ரபிக்களின் கருத்துக்களின்படி யோசுவாவின் இறப்பு மற்றும் ஒரு சில துண்டுப் பகுதிகளைத் தவிர ஏனையப் பகுதிகளை யோசுவாவே எழுதியிருக்க வேண்டும். அவ்ராவானல் (Avravanel) ) என்ற யூத அறிஞர் சாமுவேல் இந்நூலின் ஆசிரியராக இருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றார்; அதற்குக் காரணமாக இந்நூலில் வருகின்ற இந்நாள்வரை என்ற சொற்றொடரைச் சுட்டிக்காட்டுகின்றார் (யோசுவா 4:9; 5:9; 6:25; 7:26 முதலியன). இக்கால அறிஞர்கள் கி.மு. ஏழு அல்லது ஆறாவது நூற்றாண்டுகளில் இணைச்சட்ட ஆசிரியர்கள் இந்நூலை எழுதியிருக்கவேண்டும் எனக் கருதுகின்றனர். செக்கேம் நகரில் மக்கள் ஏற்படுத்தின உடன்படிக்கையைப் பற்றிய குறிப்புகளில் யோசுவா இவ்வார்த்தைகளைக் கடவுளின் திருச்சட்ட நூலில் எழுதினார் (யோசுவா 24:26) என வாசிக்கிறோம். எனவே இந்நூலின் சில பகுதிகளை யோசுவா எழுதினார் எனச் சந்தேகமில்லாமல் கூறலாம். இந்தக் குறிப்பைத் தவிர விவிலியத்தில் வேறு எந்த இடத்திலும் இந்நூலை எழுதியவர் பற்றிய விபரம் எதுவுமில்லை.

இந்நாள்வரை என்ற சொற்றொடர் இந்நூல் எப்போது எழுதப்பட்டது என்பதை அறிந்துகொள்வதற்கு ஒரு காரணியாக இருக்கலாம். பிரேவாடுசைல்ட்ஸ் (Brevard Childs) என்ற விவிலிய அறிஞர் யோசுவா 15:63 மற்றும் 16:10 ஆகிய இடங்களில் வருகின்ற இந்நாள்வரை என்ற சொற்றொடர் கி,மு. பத்தாவது நூற்றாண்டிற்குப் பிந்தியதாக இருக்க முடியாது என்கிறார். அதற்கு ஆதாரமாக அவர் யோசுவா 15:63 இல் எருசலேம் நகரில் யூதா குலத்தைச் சார்ந்தவர்கள் எபூசியர்களுடன் வாழ்ந்ததாகக் கூறுவதைச் சுட்டிக்காட்டுகிறார். ஏறக்குறைய கி.மு. 1003 ஆம் ஆண்டில் தாமிது எபூசியர்களை வென்று எருசலேமைக் கைப்பற்றினார் (2 சாமு 5:6-10). எனவே அந்த நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் எபூசியர்கள் எருசலேமில் அதிகமாக வாழ்வதற்கு வாய்ப்பில்லை. மேலும் யோசுவா 16:10 இன்படி எப்ராயீம் குலத்தவர்கள் கெசேரில் கானானியர்களுடன் இணைந்து வாழ்ந்தனர். கி.மு. 978-

959 காலக்கட்டத்தில் எகிப்திய பார்வோன் கெசேரில் வாழ்ந்த கானானியர்களை அழித்துவிட்டு கெசேர் நகரை சாலமோனுக்கு சீர்வரிசையாகக் கொடுத்தான் (1 அர 3:1; 9:16). எனவே கெசேரில் கானானியர்கள் வாழ்ந்தார்கள் என்ற குறிப்பு அக்காலத்துக்கு முந்தைய செய்தியாகவே இருக்கவேண்டும்.

இஸ்ரயேல் மக்களின் வரலாற்றின் ஒரு முக்கியமான காலத்தை யோசுவா நூல் எடுத்துரைக்கிறது. குறிப்பாக, இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைந்து அங்கு குடியேறிய காலத்தை யோசுவா நூல் பதிவுசெய்கிறது. கடவுள் ஆபிரகாமுக்கும் அவரது வழிமரபினருக்கும் கொடுத்த வாக்குறுதிகள் இஸ்ரயேல் மக்கள் கானான் நாட்டில் குடியேறுவதன் வழியாக நிறைவேறுவதாகக் காட்டப்படுகிறது. கடவுள் வரலாற்றின் கடவுளாக இருக்கிறார் என்பதை இந்நூல் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறது. இஸ்ரயேல் மக்களின் வெற்றிகள் அனைத்தும் கடவுளால் நிகழ்கிறது என்பது தெளிவாகக் கூறப்படுகிறது. வாக்களிக்கப்பட்ட இந்த நிலத்தை இஸ்ரயேல் மக்களுக்குக் கொடுக்கவேண்டும் என்றுதான் கடவுள் செயல்படுகிறார். வாக்களிக்கப்பட்ட நாடு இஸ்ரயேல் மக்களுக்குக் கடவுள் கொடுத்த கொடை, மூதாதையர்களுக்குக் கடவுள் கொடுத்த வாக்குறுதியின் நிறைவு என்பது தெளிவாகக் கூறப்படுகிறது. இவ்வாறு கடவுள் நம்பிக்கையுள்ளவராக, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுபவராக இந்நூலில் சித்தரிக்கப்படுகிறார். யோசுவாவின் பிரியாவிடை உரைகள் இக்கருத்தை மிகவும் வலியுறுத்துகின்றன (யோசுவா 22-24). கடவுள் நம்பிக்கைக்குரியவர், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர் என்ற செய்தி இஸ்ரயேல் மக்களின் வரலாற்றில் எல்லாக் காலத்திற்கும் பொருந்தக் கூடியதாகவே உள்ளது. குறிப்பாக. நாட்டை இழந்து அகதிகளாகப் பாபிலோனில் வாழ்ந்தபோது இந்த செய்தி அவர்களின் வாழ்விற்கு நம்பிக்கையூட்டுவதாக இருந்தது எனலாம்.

யோசுவா நூலை ஐந்நூல்களுக்கு முடிவுரையாகவும் வரலாற்று நூல்களுக்கு முன்னுரையாகவும் கருத வாய்ப்பிருக்கிறது. ஐந்நூல்களில், குறிப்பாக தொடக்கநூலில் ஆண்டவர் மூதாதையர்களுக்குக் கொடுக்கும் நிலம் சம்பந்தமான வாக்குறுதி யோசுவா நூலின் நிறைவுக்கு வருகிறது. இஸ்ரயேல் மக்கள் யோசுவாவின் தலைமையில் வாக்களிக்கப்பட்ட நாடான கானான் நாட்டைக் கைப்பற்றி அங்கே குடியேறுகின்றனர். யோசுவா நூல் எளிதான இலக்கியக் கட்டமைப்பைக் கொண்டதாக உள்ளது. இந்நூலின் முதல் ஐந்து பிரிவுகள் வாக்களிக்கப்பட்ட நாட்டைக் கைப்பற்றுவதற்கான தயாரிப்புகளைக் குறிப்பிடுகின்றன.

இரண்டுவிதமான தயாரிப்புகளை இப்பிரிவுகளில் பார்க்கிறோம். முதலாவது அன்மீக தயாரிப்புகள். இரண்டாவது, நாட்டைக் கைப்பற்றுவதற்காகப் போருக்கான தயாரிப்புகள். 6-12 வரையுள்ள பிரிவுகள் எவ்வாறு கானான் நாட்டின் பல நகரங்களையும் கிராமங்களையும் இஸ்ரயேல் மக்கள் கைப்பற்றுகிறார்கள் என்பதை எடுத்துரைக்கின்றன. இப்பகுதியை மீண்டும் மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம். இதில் 6-8 வரையுள்ள பிரிவுகளைக் கொண்ட முதல் பாகம் எவ்வாறு எரிகோ நகரமும் அய் நகரமும் கைப்பற்றப்பட்டன என்பதை எடுத்துரைக்கின்றன. 9-10 பிரிவுகளைக் கொண்ட இரண்டாவது பாகம் யூதேயப் பாலைவனத்தை உள்ளடக்கிய கானான் நாட்டின் தெற்குப் பகுதியைக் கைப்பற்றுவதைக் குறிப்பிடுகின்றன. 11-12 பிரிவுகளை உள்ளடக்கிய மூன்றாவது பாகத்தில் 11 வது பிரிவு கலிலேயாவை உள்ளடக்கிய கானான் நாட்டின் வடக்குப் பகுதியைக் கைப்பற்றுவதையும், 12 வதுபிரிவு கைப்பற்றப்பட்ட நாடுகள் அடங்கிய பட்டியலையும் குறிப்பிடுகின்றன.

மூன்றாவதாக, 13-21 வரையுள்ள பிரிவுகள் கைப்பற்றப்பட்ட நிலப்பரப்பை எவ்வாறு யோசுவா ஒவ்வொரு குலங்களுக்கும் பிரித்துக் கொடுக்கிறார் என்பதைக் குறிப்பிடுகிறது. இதில் 13 வதுபிரிவு யோர்தானுக்குக் கிழக்குப் பகுதியில் உள்ள நிலப்பரப்பு எந்தெந்த குலங்களுக்கு கொடுக்கப்படுகிறது என்பதையும், 14-17 வரையுள்ள பிரிவுகள் யோர்தானுக்கு மேற்கே உள்ள நிலப்பரப்பு எந்தெந்த குலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன என்பதையும், 18-19 பிரிவுகளில் மீதமுள்ள நிலப்பரப்பு எவ்வாறு மீதமுள்ள குலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகின்றது என்பதையும் பதிவுசெய்கின்றன. 20-21 பிரிவுகள் லேவியர்களுக்குக் கொடுக்கப்படும் நகரங்களைப் பட்டியலிட்டுக் குறிப்பிடுகின்றன. ஏனைய குலங்களைப்போல லேவியர்களுக்கு நிலம் பங்கிட்டுத் தரப்படவில்லை. மாறாக அவர்கள் வாழ்வதற்கு எல்லாக் குலங்களின் நடுவிலுமாக நாற்பத்தெட்டு நகரங்கள் ஒதுக்கப்பட்டன. 22 வதுபிரிவு யோர்தானுக்குக் கிழக்குப் பகுதியில் குடியிருக்கும் குலங்கள் ஆண்டவருக்குப் பிரமாணிக்கம் உள்ளவர்களாக வாழ்வார்கள் என்பதைக் குறிப்பிடும் வகையில் ஒரு பலிபீடம் எழுப்பப்படுவதைப் பதிவுசெய்கிறது. 23-24 பிரிவுகள் ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுடன் சீனாய் மலையில் ஏற்படுத்திய உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாக இஸ்ரயேல் மக்கள் வாழவேண்டும் என்ற யோசுவாவின் அழைப்பையும், உடன்படிக்கைப் புதுப்பிக்கப்படுவதையும் பதிவுசெய்கின்றன.

பயணம் தொடரும்,

அருட்பணி ஆ. அலெக்ஸ். cmf



அருட்பணி.ஜஸ்டின் சேவியர் ராஜ்
பங்குத் தந்தை. திருக்குடும்ப ஆலயம்
பெருந்துறை, கோவை மறைமாவட்டம்

# ஞாயிறு மறையுரை



**புனித வாரம்**
**குருத்து ஞாயிறு**
**24.03.2024**

**திருப்பலி வாசகங்கள்**

எசாயா 50/4-7
பிலிப்பியர் 2/6-11
மாற்கு 14/15-47

## பாடுகளின் குருத்து ஞாயிறு

சீன நாட்டில் கன்ஃபூசியஸ் மதத்தைச் சேர்ந்த ஒரு மனிதர் கிறிஸ்தவராக மாறினார். இது அந்த மதத்தைச் சேர்ந்த மற்றவர்களுக்கு எரிச்சலையும், கோபத்தையும் ஏற்படுத்தியது. அவரை அழைத்து, நமது பழம் பெருமை வாய்ந்த கன்ஃபூசியஸ் மதத்தை விட்டுவிட்டு கிறிஸ்தவனாக மாறியது ஏன்? என்று கேட்டனர். அதற்கு அந்த அம்மனிதன், உங்களது கேள்விக்கு ஒரு கதை வழியாகப் பதில்கூற விரும்புகிறேன். நான் ஒரு ஆழமான குழியில் விழுந்து கிடந்தேன். என்னை யாராவது காப்பாற்ற மாட்டார்களா என்று ஏங்கிக் கிடந்தபோது, அந்த வழியாக வந்த கன்ஃபூசியஸ் எட்டிப் பார்த்தார். தந்தையே என்னைக் காப்பாற்றும் என்று கதறினேன். நீ சரியான பாதையில் செல்வதற்காக, நான் எவ்வளவோ நல்ல காரியங்களைச் சொல்லியுள்ளேன். நீ அவற்றைப் பின்பற்றாததன் காரணமாகத்தான் இக்குழியில் வீழ்ந்துவிட்டாய், நான் உன்னைக் காப்பாற்ற முடியாது என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

பின்பு புத்தர் எட்டிப் பார்த்தார். அவரிடமும் கதறினேன். அவரோ, ஆசையே துன்பத்திற்குக் காரணம், நீ ஆசைகளை நீக்கியிருந்தால், இங்கு வந்திருக்க மாட்டாய், நீ ஆசைப்பட்டதற்கான பலனை இப்போது அனுபவிக்கிறாய், என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். பின்பு குழியினுள் எட்டிப் பார்த்த முகமது நபியிடம், என்னைக் காப்பாற்றும் என்று கதறினேன். அவரோ, இப்போது துன்பப்பட்டாலும், அடுத்த உலகத்தில் உனக்கு மகிழ்ச்சி உண்டு என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். இறுதியாக இயேசு கிறிஸ்து எட்டிப் பார்த்தார், என்னுடைய நிலையைக் கண்டவுடன், நான் உதவி கேட்காமலே, உள்ளே இறங்கி என்னை மேலே கொணர்ந்தார்,நான் கிறிஸ்தவனாக மாறியதற்கான காரணம் இதுதான் என்று பதில் கூறினார்.

வெற்றியின் சிகரத்தையடைய துன்பங்கள் என்ற சிராய்ப்புகளைத் தந்தித்துத்தான் ஆகவேண்டும் என்பார் அறிஞர் ஒருவர். இயேசு குருத்தோலை ஏந்திய மக்களோடு எருசலேம் நோக்கி பயணம் செல்கிறார். இயேசுவின் தலை மையில் புதியாதோர் உலகம் கண்டிட இந்தக் குருத்தோலைப் பவனி அழைப்பு விடுக்கிறது. அசைகின்ற குருதோலைகள் இயேசுவின் உயிர்ப்புக்குத் துவக்க விழாவாக அமைகிறது. இயேசு பவனியில் முன்னால் வழிநடக்க உலக மக்கள் அனைவரையும் தனக்குப் பின்னால் அழைத்துக் கொண்டு எருசலேம் நோக்கி விரைகிறார். இயேசுவின் பயணம் புதிய விடியலுக்காகக் காத்திருக்கும் இரவின் காலம், புயலுக்குப்பின் அமைதி. அமைதியின் விளைவு ஆனந்தம் என்று பாடுகளின் வழியில் நம்மை உயிர்ப்புக்கு அழைத்துச் செல்ல இயேசு புறப்படுகிறார். தன்னிடம் இருப்பதையெல்லாம் இழந்தாலும், மனந்தளராது தனது இலட்சியப் பயணத்தை இழக்காமல், தலைநிமிர்ந்து நிற்கும் துன்புறும் ஊழியன் என்பதை எசாயா, படம்பிடித்துக் காட்டுகிறார். அடிமையின் நிலையில் தன்னை இழந்து தந்தை இறைவனில் மகிமையைக் காண இயேசு பாஸ்காப் பயணத்தைத் தொடர்ந்தார். இயேசுவின் இந்தப் பயணம் பாடுகளின் சிந்தனை நம் உள்ளங்களை உருக்கி, மனங்களை நொருக்கி, மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று நற்செய்தி அறிவுறுத்துகிறது.

துன்பத்தைப் பற்றிய விளக்கவுரைகள் விமோசனத்தைத் தந்துவிடப்போவதில்லை. காரணம் விளக்கவுரைகளும், அறிவுரைகளும் மூளையிலிருந்து கொடுக்கப்படுபவை. ஆனால் துன்பமோ, உணர்வோடும், இதயத்தோடும் தொடர்புடையது. எனவே இறைவன் வித்தியாசமான வழி ஒன்றைக் கடைப்பிடிக்கிறார். சோர்ந்து வாழும் மனித இனத்தோடு சேர்ந்து துன்புறுவதுதான் அந்த வழி. இவ்வழியே அவர்களை மீட்பதற்கான சிறந்த வழி என்று இறைவன் கருதினார். எனவேதான் கடவுள் தன்னுடைய மகனை சாதாரண மனிதனாக மட்டுமல்ல, சிலுவைச் துன்பத்தை (பிலிப்பியர் 2/6-8) அனுபவிப்பவராகவும் அனுப்பினார். தான் பாடுகளையும், துன்பத்தையும் ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல், அவற்றிற்குப் புதிய அர்த்தத்தையும், பெருளையும் கொடுத்தவர். இயேசு கிறிஸ்து,

இயேசுவின் சாவில் சிலுவை புதிய அர்த்தம் பெற்றதுபோல, துன்பங்களும் புதிய அர்த்தம் பெற்றன. துன்பத்தை மீட்பின் கருவியாக மாற்ற முடியம் என்பதே இயேசு கெடுத்த புதிய அர்த்தம். எனவே புதிய மாற்றத்திற்கான துன்பத்தை இன்பத்தோடு ஏற்போம். ஆமென்.



# ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு

எசா 50 : 4-7, பிலி. 2 : 6-11, மத். 26 : 14-27, 66



பா. சேவியர்
திண்டுக்கல்

## குருத்தோலை திருப்பலி முன்னுரை

கரங்களில் குருத்தோலை ஏந்தி, இயேசுவை நம் அரசராக ஏற்று வழிபட வருகை தந்துள்ள இறை குலமே, இறையாசீரைப் பகிர்ந்தளிக்க வருகை தந்துள்ள குரு குலமே, உங்கள் அனைவரையும் புனித வாரத்தின் நுழைவாயிலில் நின்று கொண்டு வரவேற்று மகிழ்கிறேன்.

குருத்தோலைப் பவனியில் கலந்து கொண்டு, உன்னதங்களிலே ஓசான்னா என்று களிகூர்ந்து ஆர்ப்பரித்து மகிழ்ந்து, இயேசுக் கிறிஸ்துவே ஆண்டவர் என அறிக்கையிட்டு, நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்கும் அறிவைப் பெற்றிடவும் நாம் இங்கே கூடியுள்ளோம்.

கழுதைக் குட்டியாகிய மறியின் மேல் அமர்ந்து, மாமரி மைந்தன் பவனி வருகிறார். இப்பவனி இயேசுவை மெசியா என்று இம் மேதினிக்குப் பறைசாற்றுகின்ற பவனி. இது பாவத்தை வென்று பாசத்தை உருவாக்கும் பவனி.

நமது கரங்களில் ஏந்தும் குருத்தோலைகளும், நாம் இசைக்கும் ஓசான்னா கீதமும் இப்பூமியில் நிலவும் மனித உரிமை மீறல்களுக்கும், ஏற்றத் தாழ்வுகளுக்கும், ஆதிக்கத் தனங்களுக்கும் சாவு மணி அடிக்கும் உரிமைக் குரலாக ஒலிக்கட்டும்.

இயேசு நற்கருணையை ஏற்படுத்தியது, யூதாசால் காட்டிக் கொடுக்கப்பட்டுக் கைது செய்யப் பட்டது, அவர் சிலுவையில் உயிர் துறந்து அடக்கம் செய்யப்பட்டது எனத் திருப்பாடுகளின் நீண்ட வரலாற்றை நாம் இன்றையத் திருப்பலியில் தியானிக்க இருக்கின்றோம்.

வாருங்கள் இறைமக்களே, எளிய கோலத்தில் பவனி வரும் இயேசுவைத் தெய்வத் திரு மகனாக நம் விசுவாசக் கண் கொண்டு பார்த்துப் பரவசப்பட்டு, போற்றி வாழி என்று ஓசான்னா பாடியபடி இத்திருப்பவனி வழியாக இயேசுவோடு கல்வாரிக்குப் பயணமாவோம்.

## முதல் வாசக முன்னுரை

தான் கேட்டதை, கற்றதை, உணர்ந்ததைப் பிறருக்கு அறிவிப்பவனே உண்மை ஊழியன் என்ற எசாயாவின் கவித்துவமிக்க வாசகம் இன்றைய முதல் வாசகமாக அருளப்பட்டுள்ளது. பணிவை மையமாகக் கொண்ட இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கீழ்ப்படிதலும் தாழ்ச்சியும் உள்ளவன் உயர்த்தப்படுவான். தாழ்வே உயர்வுக்கு வழி என்பதை எடுத்துரைக்கிறது இன்றைய இரண்டாம் வாசகம். இயேசுவின் மூலம் தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர் என்று தூய பவுலடியார் எழுப்பும் நம்பிக்கை கீதத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) ஆக்குபவராய், காப்பவராய், அருள் தருபவராய் விளங்கும் தந்தையே இறைவா, தான் கேட்டதை, கற்றதை, உணர்ந்ததை பிறருக்கு அறிவிக்கும் உண்மை ஊழியராய் பணிபுரியும் எம் திருத் தந்தை, ஆயர்கள், அருட்பணியா ளர்கள் அனைவரும் அர்ப்பணிப் போடு பணியாற்றவும், அவர்கள் எதிர்கொள்ளும் இடையூறுகளைத் துணிச்சலுடன் சந்திக்கவும் அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) விடுதலையின் தெய்வமே இறைவா, புனித வாரத்தில் நுழை கின்ற நாங்கள் உமது திருமகன் இயேசுவின் பாடுகளையும் இறப்பை யும் சிந்தித்து, தியானித்து அதன் மூலம் பாவ வழியை விட்டொழித்து, உமக்கேற்ற மக்களாய் வாழவும், எங்கள் வாழ்க்கையில் வருகின்ற துன்ப துயரங்களை அவரைப்போல் இன்முகத்துடன் ஏற்று அவரை பின் செல்லவும் வரமருள வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) காலந்தோறும் எம்மைத் தட்டி எழுப்பி, நல்வாக்கால் எம்மை ஊக்குவிக்கும் இறைவா, எங்களைப் பீடித்துள்ள உடல், உள்ள, ஆன்ம நோய்களைக் குணமாக்கி, புது வாழ்வினை எமக்கு அருள வேண்டுமென்றும், உமது கொடையாக நாங்கள் பெற்றுள்ள இந்த ஒப்புரவு காலத்தை நன்றியுடன் பயன்படுத்தி உமக்கேற்ற பிள்ளைகளாக வாழ வரமருள வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) எம் பிணிகளை ஏற்றுக் கொண்டு, எம் நோய்களைச் சுமந்து கொண்டு, எம் பாவங்களுக்காக காயம்பட்ட இறைவா, பல்வேறு நோய்களினால் உம் மக்களாகிய நாங்கள் படும் வேதனைகளையும் துயரங் களையும் கருணை கண்கொண்டு பாரும். நோயால் பாதிக்கப்பட்டோர் விரைவில் குணமடைந்து நலம் பெற அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# ஆண்டவருடைய இரவு விருந்து

விப. 12 : 1-8, 11-14 1கொரி. 11 : 23-26, யோவா. 13 : 1-15



பா. சேவியர்
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

நித்தியத்திற்கும் நிலையான வாழ்வைப் பற்றிக்கொள்வதைக் குறிக்கும் பாஸ்கா விழாவில் பங்கெடுத்து, தீமையின் ஆதிக்கத்திலிருந்து விடுபட வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே, உங்கள் அனைவரையும் ஆண்டவருடைய இரவு விருந்து வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இன்று இயேசு, பழைய ஏற்பாட்டைப் புதுப்பித்து புனரமைத்து புதிய ஏற்பாட்டை உருவாக்குகிறார். அவர் தன்னையே உடைத்து, தனது உடலையும் இரத்தத்தையும் நமக்கு உணவாகவும் பானமாகவும் தருவதன் வழியாகத் தன் அன்பின் கொடையாக நற்கருணை என்ற திருவருட் சாதனத்தை ஏற்படுத்துகிறார்.

இயேசுவைப்போல் நாமும் அடுத்தவரின் நலனில் அக்கரை கொண்டு நேசித்து, நம்மையே உடைத்து பகிர்ந்து கொடுக்க முன்வர வேண்டும் என்று இந்த புனித வியாழன் நம்மை அழைக்கிறது.

தனது மேய்ப்புப் பணியைத் தொடர்ந்து நிறைவேற்ற, மக்களைப் பசும்புல் மேய்ச்சலுக்கும் தெளிந்த நீரோடைக்கும் அழைத்துச் செல்ல, இயேசு குருத்துவத்தை ஏற்படுத்தி, அக்குருத்துவத்தில் நம்மைப் போல் சாதாரண மக்களும் பங்கெடுக்க வழி செய்கிறார்.

இயேசுவின் கல்வாரிப் பாடுகள் நமது வாழ்வுக்கு அடித்தளமாய் அமைய, நாம் நீதியின் வழியில் பயணிக்க, சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் கடைப்பிடித்து பணிவிடை புரிந்து மகிழ வரம் வேண்டி இன்றைய திருநிகழ்வுகளிலும் திருப்பலியிலும் பக்தியுடன் பங்கெடுப்போம்.

குருத்துவம் ஓர் இறை அழைத்தல், குருத்துவம் ஓர் அர்ப்பணம், குருத்துவம் ஓர் ஆன்மீகத் தியாக வாழ்வு என்பதை உணர்ந்து, நம் திருத்தந்தை, ஆயர்கள், நம் பங்குத் தந்தையர் மற்றும் அருட் பணியாளர் அனைவரையும் வாழ்த்தி வணங்குவோம். அவர்களது தியாக வாழ்வை எண்ணி அவர்களைப் போற்றிப் புகழ்வோம். அவர்களது பணி சிறக்க, நல்ல உடல் நலத்தையும் ஆன்ம பலத்தையும் பெற இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## முதல் வாசக முன்னுரை

இயேசு திவ்ய நற்கருணையை உண்டாக்கிய இந்நன்னாளில் பாஸ்கா திருவிழா பற்றிய செய்தியை முதல் வாசகமாக திருஅவை நமக்கு வழங்குகிறது. இருளின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, விடுதலை வாழ்விற்குள் வீறு நடைபோட எழுச்சி தரும் தென்றலாய் வீசும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

திருவிருந்தை ஆண்டவர் இயேசு ஏற்படுத்தியது பற்றி மூன்று நற்செய்தியாளர்கள் மட்டுமன்று தூய பவுலடியாரும் எடுத்துக் கூறும் கருத்து இன்றைய இரண்டாம் வாசகமாக அருளப்பட்டுள்ளது. திருவிருந்தில் பங்குகொள்வதற்கான தகுதிகளையும் குணங்களையும் விளக்கிச் சொல்லும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## பாதம் கழுவும் சடங்கு முன்னுரை

கருணையும் கடமையும், பணிவும் பொறுமையும், எளிமையும் தாழ்ச்சியும் இருந்தால் தரணியில் தலை சிறந்த தலைவராக உருவாக முடியும் என்பதை இயேசு தன் செயலால் வாழ்ந்து காட்டுகிறார். உயர்ந்தவன் தாழ்ந்தவன், இருப்பவன் இல்லாதவன், படித்தவன் பாமரன் போன்ற வேற்றுமைகளைப் புறந்தள்ளி அனைவரையும் அன்பின் வடிவாக, ஆண்டவரின் சாயலாக ஏற்று வாழ இப்பாதம் கழுவும் சடங்கு நம்மை அழைக்கிறது. தாழ்ச்சியை யும் எளிமையையும் கற்றுத்தரும் இத்திருநிகழ்வில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

## மன்றாட்டுகள்

உங்கள் பதில் : திவ்ய நற்கருணை நாதரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

1) பணிவிடை பெற அல்ல, பணிவிடை புரியவே வந்தேன் என்று வாழ்ந்து காட்டிய அன்பு இறைவா, உமது அழைப்பை ஏற்று, பணிவிடை புரிய குருத்துவத்தைத் தேர்ந்தெடுத்த எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட் தந்தையர், அருட் கன்னியர் அனைவரையும், அவர்களை அருட் பணிக்கு அர்ப்பணித்த அவர்தம் பெற்றோரையும் நிறைவாக ஆசீர்வதியும். இறைமக்களை அன்பின் வழியிலும், ஆன்மீக ஒளியிலும் வழிநடத்தத் தேவையான ஆற்றலையும் ஆன்ம பலத்தையும் ஆரோக்கியத்தையும் அவர்களுக்குத் தந்தருள வேண்டுமென்று நற்கருணை நாதரே உம்மை மன்றாடுகிறோம்.

கருணையும் இரக்கமும் நிறைந்த இறைவா, எம்மை ஆண்டு வழி நடத்துகின்ற எம் தேசத் தலைவர் களை நிறைவாக ஆசீர்வதியும். மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதில் முழுக் கவனம் செலுத்தி கடமை யாற்றவும், தாழ்ச்சி எளிமை ஒழுக்கம் ஆகிய நற்பண்புகளைக் கொண்டு மக்களுக்குப் பணிவிடை புரியவும் அருள் புரிய வேண்டு மென்று நற்கருணை நாதரே உம்மை மன்றாடுகிறோம்.

2) தன் அன்பின் கொடையாகத் தன்னையே நற்கருணை வடிவில் வழங்கிய இறைவா, பல கோதுமை மணிகள் அப்பமாகி உணவாக வருவதுபோல, நாங்கள் பலராயினும் ஒரே உடலாய் உமக்குள் வாழ்கிறோம் என்ற உயர்ந்த எண்ணத்தோடும், நாங்கள் அனைவரும் ஓர் குலம், ஓர் இனம் என்ற சிந்தனையோடும் வாழ அருள் புரிய வேண்டுமென்று நற்கருணை நாதரே உம்மை மன்றாடுகிறோம்.


3) பழைய ஏற்பாட்டைப் புதுப்பித்து புனரமைத்து, புதிய ஏற்பாட்டை எமக்காக உருவாக்கிய இறைவா, கணவன் மனைவி பிள்ளைகள் என்ற குடும்ப உறவில் அப்பழுக்கற்ற அன்பை வெளிப்படுத்தவும், அதன் நீட்சியாக அயலாரோடு அன்பைப் பகிர்ந்து, அனுசரித்து வாழவும் அருள் புரிய வேண்டுமென்று நற்கருணை நாதரே உம்மை மன்றாடுகிறோம்.

## நற்கருணை பவனி முன்னுரை

இயேசு தான் சென்றவிடமெல்லாம் அன்பை விதைத்துக் கொண்டே சென்றார். எண்ணற்ற பல புதுமைகளைப் புரிந்து கொண்டே சென்றார். பற்பல நன்மைகளை செய்து கொண்டே சென்றார்.

அவர் என்னைத் தொடமாட்டாரா, அவரது கடைக்கண் பார்வை என் மேல் விழாதா, அவரது ஆடையின் விளிம்பையேனும் தொட மாட்டோமா என்று அன்று பலர் ஏங்கினர். இன்று இப்போது அதே இயேசு விண்ணகம் நோக்கியப் பயணத்தில் வழிப் பயணக் கொடையான, ஆன்ம உணவான அப்ப வடிவில் நம்மைத் தேடி, நம் மத்தியில் பவனியாக வருகிறார்.

வாருங்கள் இறை மக்களே, தன் அன்பின் கொடையாக, தன்னை யே நற்கருணை வடிவில் வழங்கிய இறைவனை முழந்தாள் பணிந்து வாழ்த்தி வணங்கி வரவேற்போம்.



# புனித இரவில் பாஸ்கா திருவிழிப்பு

## திருப்பலி தொடக்கவுரை



பா. சேவியர்
திண்டுக்கல்

ஆண்டவர் தோற்றுவித்த நாள் இதுவே! அகமகிழ்வோம், அக்களிப்போம்! மரணச் சிறையின் கரங்கள் முறிந்தது! மறுமை வழியின் தடைகள் உடைந்தது! இகபரம் இணைக்கும் வாசல் திறந்தது! அகம் புறமெங்கும் அமைதி நிறைந்தது! சாவே உனது கொடுக்கு எங்கே? மனிதா உனது தீர்ப்பு எங்கே? அலகையே உனது ஆணவம் எங்கே?

40 நாட்களாக வருந்தித் தவமிருந்து ஆண்டவருடைய உயிர்ப்புக்காகக் காத்திருந்தோம். முகில் கிழித்து வெளி வரும் முழுமதியென, கடல் குளித்து வெளிக் கிளம்பும் கதிரென அடக்கம் பண்ணப்பட்ட கல்லறையிலிருந்து உயிர் பெற்று எழுந்து, சாவை வென்று சரித்திரம் படைக்கிறார் இறை மகன் இயேசு. இறப்பு என்பது முடிவல்ல, அது மறுவாழ்வின் தொடக்கம் என்பதை இயேசுவின் உயிர்ப்பு எடுத்துச் சொல்கிறது.

இயேசு இந்த அவனிக்குத் தந்த சமாதானத்தைச் சுமந்து வரும் தூதுவர்களாய் வாழ இன்றைய வழிபாடு நம்மை அழைக்கிறது. உள்ளத்தில் மண்டிக்கிடக்கும் பகை உணர்வுகளைத் துடைத்து சுத்தம் செய்து நம் உள்ளங்களை அன்பு வாழும் உறைவிடமாக மாற்ற அழைக்கிறது.

உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்று உயிர்த்த இயேசு இத்திருப்பலி வழியாக நம்மை வாழ்த்தி வரவேற்கிறார். அவர் வழங்கும் அமைதியை முழுமையாகப் பெற்று மகிழ, உயிர்ப்பின் மக்களாக வாழ பக்தியுடன் இன்றைய வழிபாடுகளில் பங்கு பெறுவோம்.

### திரு ஒளி வழிபாடு முன்னுரை :

திருவிழிப்புச் சடங்கின் முதல் பகுதியாக இடம் பெறுவது திருஒளி வழிபாடு. கடவுளின் படைப்பில் முதல் படைப்பு ஒளி. கிறிஸ்துவே உலகத்தின் ஒளி. அவரது உயிர்ப்பின்

அடையாளமாகத் தீயும், அதனைத் தாங்கிக்கொள்கிற மெழுகுவர்த்திகளும் புனிதப் படுத்தப்படுகின்றன. கிறிஸ்து வின் ஒளி நம்மிலே ஒளிர, இந்த உலகம் விடியல் காண திரு ஒளி வழிபாட்டைத் தொடங்குவோம்.

## பாஸ்கா புகழுரை முன்னுரை

வரலாற்றை வழி நடத்துப வரும், வரையறை செய்பவரும் இறைவன். நம்மை இயக்கு பவரும், நம்மில் இயங்குபவரும் அவரே. இறைவன் நம் வாழ் வில் நிகழ்த்தும் செயல்களை நினைத்து அவரைப் புகழ்வதும், நன்றி கூறுவதும் நமது கடமை யாகும். பாஸ்கா மறை நிகழ்ச்சி யை நினைவுகூர்ந்து புகழ்ந்து பாடுவோம். எரியும் மெழுகுவர்த் திகளுடன் நம் இதயங்களும் இறைவன்பால் எழும்பட்டும்.

## இறைவாக்கு வழிபாடு முன்னுரை

ஒளியாகிய இறைவன் இஸ்ரயேல் மக்கள் வாழ்வில் எப்படியெல்லாம் செயல்பட்டு மீட்புக்கு வழிவகுத்தார் என்பதை இன்றைய இறைவார்த்தைகள் எடுத்துரைக்கின்றன. நமது கைகளில் உள்ள எரியும் மெழுகு திரிகளை அணைப்போம். இறை ஒளியை நெஞ்சில் ஏற்று வோம். தியானச் சிந்தனை யுடன் இறைவார்த்தைகளைக் கேட்போம்.

## முதல் வாசக முன்னுரை
## (தொ.நூ. 1:1 – 2:2 )

கால பிரமாணத்தோடு சுழலும் இந்த பூமி, இப்பூமியின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் கடல், எழில் கொஞ்சும் சோலைகள், விரிந்து பரந்த நீல வானம், அந்த வானத்திலே நீந்தித் திரியும் விண்மீன்கள், வளம் தரும் வான்மழை இவை யாவையும் தன் கொடைகளாகப் படைத்த இறைவன். இவை அனைத்தை யும்விட மனிதனை தன் சாயலாகப் படைத்து, அவனைத் தன் படைப்புகளின் சிகரமாக் கினார் என்பதைக் காட்சிப் படுத்தும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை
## (தொ.நூ. 22 : 1–18) :

தங்கம் தீயிலே குளித்துத் தனது தூய்மையை நிரூபிக்கிறது. விதை மண்ணிலே மடிந்து தான் விருட்சம் என்பதை நிரூபிக் கிறது. மழையை மண்ணுக்குத் தூதனுப்பி இயற்கை தன் இயல்பை நிரூபிக்கிறது. அதே போல் ஆபிரகாம் ஆண்டவர் மேல் கொண்ட ஆழ்ந்த விசுவா சத்தை எப்படி நிரூபிக்கிறார் என்பதை விளக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மூன்றாம் வாசக முன்னுரை
## (வி.ப. 14 : 15 – 15 : 1)

விடியலைத் தேடி அலைந்த இஸ்ரயேல் மக்களை இறைவன் மோசேயின் தலைமையின் கீழ் வழி நடத்தி, செங்கடலைக் கடக்கச் செய்த நிகழ்வே இன்றைய மூன்றாம் வாசகம். உயிர்த்த ஆண்டவரில் நம்பிக்கைகொள்ளும் எவரும் துன்பக் கடலைக் கடக்கும் ஆற்றலைப் பெறுவார்கள் என்ற விசுவாசத்துடன் இவ்வாசகத்தைக் கேட்போம்.

## நான்காம் வாசக முன்னுரை
## (எசாயா 54 : 5 – 14)

நாம் நெறி தவறி, வழி தவறிச் சென்றாலும் கடவுள் இரக்கத்தோடு நம்மை மீட்கத் தேடி வருகிறார். கவலைகளால் கலங்கித் தவிக்கும் நம்மை ஒரு தாய் தேற்றுவது போல் தேற்றுகிறார். அவரது இரக்கம் மடை திறந்த வெள்ளம்போல் பொங்கிப் பாய்கிறது என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## ஐந்தாம் வாசக முன்னுரை
## (எசாயா 55 : 1 – 11)

மழை கொடுக்கும் கொடையோ இரண்டு மாதம். வயல் கொடுக்கும் கொடையோ மூன்று மாதம். பசு வழங்கும் கொடையோ நான்கு மாதம். நம்மைக் காத்து வழி நடத்தும் இறைவனுக்கோ நாளும் மாதம் என்பதை எடுத்துரைக்கிறது இவ்வாசகம். இறைவனது நிபந்தனையற்ற அன்பினை வெளிப்படுத்தும் இவ்வாசகத்தை மகிழ்வுடன் கேட்போம்.

## ஆறாம் வாசக முன்னுரை
## (பாரூக் 3 : 9 – 15, 32, 4 : 4)

ஞானத்தின் கருவூலமான இறைவனை நெருங்க ஞானம் தேவை. அந்த ஞானத்தைப் பெற தெய்வ பயம் தேவை. ஞானத்தின் தொடக்கமான தெய்வ பயம் நம்மில் நிலைகொள்ளத் தொடங்கும்போதுதான் இறைவன் விரும்புவதை நாம் செய்யத் தொடங்குவோம் என்ற சிந்தனைகளைச் சுமந்து வரும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## ஏழாம் வாசக முன்னுரை
## (எசேக் 36 : 16 – 28)

இஸ்ரயேல் மக்கள் தங்கள் பாவ வாழ்க்கையின் மூலம் இறைவனின் புனிதப் பெயரை அவமதிப்புக்கு உள்ளாக்கிய போதும், இறைவன் தனது இரக்கப் பெருக்கத்தினால்

அவர்களை மன்னித்து ஏற்றுக் கொள்வதை விளக்குகிறது இவ்வாசகம். கனிவுள்ள இதயம் கொண்டோராய், தூய ஆவியால் புதுப் பிறப்படைந் தோராய் வாழ அழைக்கும் இவ்வாசகத்தைக் கனிவுடன் கேட்போம்.

## திருமுக முன்னுரை (உரோ. 6 : 3-11)

கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்கிறவன் அவரது மரணத்திலும் உயிர்ப்பிலும் பங்குகொள்கிறான். கிறிஸ்து வின் வார்த்தையின்படி நடப்பவனோ கிறிஸ்துவாகவே மாறுகிறான் என்பதை விளக்கு கிறது பவுலடியாரின் திருமுகம். கிறிஸ்துவின் இலட்சியத்திற் காக வாழும்போது மரணத்தை வென்ற மனிதர்களாகிறோம் என்ற ஆழமான நம்பிக்கை யைத் தரும் இத்திருமுகத் திருவாசகத்திற்குக் கனிவுடன் செவி சாய்ப்போம்.

## திருமுழுக்கு வழிபாடு முன்னுரை

ஆதித் திருச்சபையில் புதுக் கிறிஸ்தவர்களுக்கு இந்தப் புனித இரவில் மட்டும்தான் திருமுழுக்குக் கொடுத்தார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆண்டவர் இயேசுவோடு இறந்து புதைக்கப்பட்டு உயிர்க் கின்றான் என்பதை நினைவு படுத்துவதே இப்புனித நிகழ்வு. எளியோர்க்கு நற்செய்தி நல்கிடவும், மனித குலத்தில் சமத்துவம் மற்றும் சகோதரத் துவத்தை மலரச் செய்யவும் அழைக்கின்ற இப்புனிதச் சடங்கில் பங்கு பெற்றுப் பயனடைவோம்.

## தூயவர்களின் மன்றாட்டு மாலை முன்னுரை :

இறைவனுக்கும் மனிதனுக்கும் ஏற்புடைய முறையில் தம் வாழ்வை அமைத்துக் கொண்ட வர்கள்தான் தூயவர்கள். நமக்கு என்றும் துணை நின்று நமது வாழ்வுக்கு வழிகாட்டியாய் இருப்பவர்கள்தான் தூயவர் கள். அத்தகைய தூயவர்கள் வழியாக இறைவனின் அருளை மன்றாடுவோம்.

## திருமுழுக்குத் தண்ணீருக்கு ஆசி வழங்குதல் முன்னுரை :

தூய்மையின் அடையாளமாக விளங்கும் திருமுழுக்குத் தண்ணீருக்கு இப்போது ஆசி வழங்கப்படுகிறது. படைப்பின் தொடக்கத்தில் நீர்த்திரளின் மீது அசைவாடிக் கொண்டிருந்த அதே ஆவியானவர் இதோ

புனிதப்படுத்தப்படும் இத்தண்ணீரிலும் அசைவாடுகிறார். திருமுழுக்கில் தூய்மையடைந்து, ஆவியானவரை அணிந்து கொண்டு, புதிய வாழ்வைத் தொடங்கிட இறையருளை வேண்டி இப்புனிதச் சடங்கில் பங்கெடுப்போம்.

## தீர்த்தம் மந்தரிப்பு முன்னுரை :

தண்ணீருக்கு ஆசி வழங்கும் திருநிகழ்வு இப்போது தொடங்குகிறது. புனிதப்படுத்தப்படும் இத்தண்ணீர் தெளிக்கப்படும் இடங்களிலெல்லாம் இறைத்தன்மை வாசம் செய்யும். இறையாட்சி மலரும். சமூக அழுக்கையும், ஆன்ம அழுக்கையும் அடித்து சலவை செய்து தூய்மைப்படுத்தும் என்ற நம்பிக்கையுடன் இத்திரு நிகழ்வில் பங்கெடுப்போம்.

## திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்தல் முன்னுரை :

இறைவனுக்கு எதிராகச் செய்யும் பாவச் செயல்களால் திருமுழுக்கின் வழியாகக் கொடுத்த வாக்குறுதிகளைக் காக்கத் தவறினோம். மீண்டும் மீண்டும் தீமையோடு உறவாடி கொடுத்த வாக்கை நீர்த்துப் போகச் செய்தோம். இதோ ஆண்டவர் மீண்டும் ஒரு வாய்ப்பை இத்திருச்சடங்கின் வழியாக நமக்கு வழங்குகிறார். காக்கத் தவறிய வாக்குறுதிகளை மீண்டும் புதுப்பித்து இறையரசில் சங்கமமாக எரியும் திரியுடன் எழுந்து நின்று வாக்குறுதிகளைப் புதுப்பிப்போம்.

## மன்றாட்டுகள்

1) உயிர்த்தெழச் செய்பவரும், வாழ்வு தருபவருமான இறைவா, உமது பாடுகளையும், மரணத்தையும், உயிர்ப்பையும் மக்கள் மத்தியில் கொண்டு சென்று, நிலை வாழ்வை நோக்கி அவர்களை வழி நடத்திச் செல்லும் திருச்சபையின் தலைவர்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர்களுக்கு பூரண உடல் நலத்தையும், செயல் ஊக்கத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) உயிர்த்த ஆண்டவரே, உள்ளொளி பரப்பும் கதிரவனே, இறந்தோரிலிருந்து உயிர்த்ததால் நீர் இன்றும் இப்பரந்துபட்ட உலகில் வாழ்கிறீர் என நம்புகிறோம். உயிர்த்த உம்முடன் நாங்களும் உயிர்த்து நிறை வாழ்வினைச் சுவைக்க அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) உயிர்த்த இயேசுவே, உமது உயிர்ப்பு எங்களுக்கும் உயிர்ப்பு உண்டு என்ற நம்பிக்கையைத் தருகிறது. எங்களை நாங்களே வெறுமையாக்கி, அழிவுக்குரிய அனைத்துத் தீமைகளையும் விட்டொழித்து உமக்கேற்ற மக்களாக, உமது உயிர்ப்புக்குச் சான்று பகரும் சீடர்களாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடு கிறோம்.


4) உலகம் முடியுமட்டும் உங்களுடனே இருப்பேன் என்று உறவுக்குக் கை கொடுத்த தெய்வமே, ஆதரவற்ற ஏழைகளையும், உடலும் உள்ளமும் தளர்ந்த முதியோரையும், கடுமையான நோயினால் வருந்துவோரையும் கருணைக் கண்கொண்டு பாரும். உமது இரக்கத்தால் அவர்களது இன்னல்களும் துன்பங்களும் விலகிட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## நற்கருணை வழிபாடு முன்னுரை :

இப்போது இன்றைய வழிபாட்டின் நான்காம் பகுதி யான நற்கருண வழிபாட்டிற்குக் கடந்து செல்கிறோம். இயேசு நமக்காகப் பலியான தியஸகத் தின் புனித நிகழ்வை இந்தப் புனிதமிகு நற்கருணையிலே கொண்டாடுவோம். நமக்கு மீட்பைக் கொண்டு வந்த ஆண்டவர் இயேசு தன்னை முழுமையாகக் காணிக்கை யாக்கினார். நாமும் நமது காணிக்கை வழியாக நம்மை நாமே நம் அடுத்திருப்போருக்கு அர்ப்பணிப்போம்.



# ஞான வெளிச்சம் தரும் பொன் மொழிகள்



உங்களை வெறுப்பவர்கள் முன் சந்தோஷமாக இருங்கள்
அது அவர்களைச் சாகடிக்கும்

ஒரு மணிநேரத்தை வீணடிப்பவர், இன்னும்
நேரத்தின் அருமையை அறியாதவர். – சார்லஸ் டார்வின்

நீச்சல் தெரிந்தும் அதை விரும்பாத மீனுக்குப்
பரந்த கடலும் பாரம்தான்.

மூன்றுபேர் இரகசியத்தைக் காப்பார்கள்,
அவர்களில் இரண்டுபேர் செத்துப்போயிருந்தால்.
–பெஞ்சமின் ஃபிராங்க்ளின்

அறியாமையே அனைத்துத் தீமைகளின்
தண்டும், ஆணிவேரும். – பிளேட்டோ.

தாங்களே முக்கியம் என்று நினைபவர்கள்தான்
உலகில் உள்ள  பெரும்பாலான பிரச்னைகளுக்குக் காரணம்.–டி.எஸ்.எலியட்

அவமானங்கள்கூட வெற்றிக்கான பாதையை அமைக்கும்
உன்னிடம், நம்பிக்கையும், பொறுமையும் இருந்தால்.

ஒருவரின் இலட்சியம் முடமாக்கப்படுவது
அவரின் சோம்பேறித்தனத்தால்தான். –சார்லஸ் புகோவ்ஸ்கி

உங்களைப் புரிந்தவர்களுக்கு மட்டும்
நல்ல புத்தகமாய் இருந்தால்போதும்.
புரியாதவர்களுக்குப் புதிராகவே இருந்துவிடுங்கள்.

புத்திசாலயாக இருந்தாலும் சில இடங்களில் முட்டாளாய் நடி.
வாழ்க்கை நிறையக் கற்றுக்கொடுக்கும்.

மனிதன்  செலவு செய்வதிலேயே விலைமதிப்பில்லாதது.
நேரமே. –டையோஜீனெஸ்

# தமிழே..அமுதே..எனதுயிரே





இகரத்தில் முடியும் வினையெச்சங்களை அடுத்து வல்லினம் மிகும்.

வினையெச்சங்கள் என்றால் என்ன?
ஒரு வினையைக் கொண்டு முடியும் எச்சம் (எச்ச வினை) வினையெச்சம் எனப்படும்.
(எடுத்துக்காட்டு)
படித்து முடித்தாள். பார்த்து மகிழ்ந்தான்.


படித்து- என்னும் எச்சச்சொல் படித்து முடித்தான் என்றும்,
பார்த்து- என்னும் எச்சச்சொல் பார்த்து மகிழ்ந்தான் எனும் வினைச்சொற்கள் ஏதேனும் ஒன்றைக் கொண்டு முடியும்.

1. இகரத்தில் முடியும் வினையெச்சங்களை அடுத்து வல்லினம் மிகும்.
(எடுத்துக்காட்டு) எழுதிக் கொடுத்தான்.
இகரம் என்றால் ஓடி, என்பதை பிரித்தால் ஒரு மெய் எழுத்தும், ஓர் உயிர் எழுத்தும் இருக்கும். உயிரெழுத்து, இறுதியில் வருவதால், இகரம் என்று அழைக்கப்படுகிறது.
2. உகரத்தில் முடியும் வினையெச்சங்கள்:
உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் வன்தொடர் குற்றியலுகரமாக இருந்தால் மட்டும் வல்லினம் மிகும்.
(எடுத்துக்காட்டு)
பெற்றுக் கொண்டேன், சிரித்துப் பார்த்தார்.

குறுகிய ஓசை உடைய உகரம் குற்றியலுகரம்.

கு, சு, டு, து, பு, று என்ற ஆறு எழுத்துக்களில் மட்டுமே வரும் உகரம் ஒரு மாத்திரை உடையது. இது ஒரு மாத்திரை அளவைவிட குறைந்து குறுகி ஒலிக்கிற இடங்களும் உண்டு. வல்லின மெய்களோடு (வன்தொடர்) சேர்ந்த உகரம் மட்டுமே குற்றியலுகரமாக வரும்.
(எடுத்துக்காட்டு)
சுக்கு, அச்சு, பட்டு, கழுத்து, உப்பு,
கசப்பு இறுதி எழுத்திற்கு முன்னரும் வல்லினம் மெய்யெழுத்து வரும் இதனையே வன்தொடர்க் குற்றியலுகரம் என்பார்.

லீமா விக்டோரியா, தமிழாசிரியை.





# விடியல்



## மனநிறைவு

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் எனது இனிய வணக்கங்களையும்இ வாழ்த்துகளையும் உரித்தாக்குகிறேன்..

எல்லா மனிதரும் நலமெனக் கருதுபவை பற்றியே எண்ணுங்கள். இயலுமானால், உங்களால் முடிந்தவரை எல்லாரோடும் அமைதியுடன் வாழுங்கள். (உரோமையர் 13: 17, 18)

படைகளின் ஆண்டவர் விரும்புவது அமைதி. நம்முடைய திறமையினாலோ, தகுதியினாலோ, செல்வத்தினாலோ கிடைத்து விடாது நிம்மதி. மாறாக இறைவனை எப்பொழுதும் நம்முடைய உள்ளம் நம்பியிருக்கும்போது அவருடைய அருளும் கிருபையும் நம்மை தாங்கும் போது, சுயநலம் விடுத்து பிறர் நலனை கருத்தில் கொள்ளும்போதுஇ நமக்கு கிடைப்பது நிறைவான மன அமைதி.

விடாமுயற்சியோடும் ஆர்வமிக்க உள்ளத்தோடும் ஆண்டவருக்கு பணி புரியுங்கள். நீங்கள் ஒரு மனத்தவராய் இருங்கள்; உயர்வு மனப்பான்மை கொள்ளாமல் தாழ்நிலையில் உள்ளவர்களோடு நன்கு பழகுங்கள். -(உரோமையர் 12: 11-16)

கிறிஸ்து நம்மை ஏற்றுக் கொண்டது போல நாமும் ஒருவரை ஒருவர் முழு மனதோடு ஏற்றுக் கொள்ளும் போது கடவுளை பெருமைப்படுத்துகின்றோம். மனவலிமை கொண்டவர்கள் வலுவற்றவர்களின் குறைபாடுகளை தாங்கிக் கொள்ள வேண்டும். நமக்கு உகந்ததையே தேடாமல் அடுத்தவரினுடைய நன்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் செயல்படும்போது, கடவுள் நம் வழியாக மாட்சி படுத்த படுகின்றார். நாம் பிறருக்கு நன்மை செய்வதில் ஞானமுடையவர்களாய் திகழும் போது நம்முடைய உள்ளத்தில் மகிழ்ச்சியும் மன நிறைவும் குடிகொள்ளும்.

ஒரு பணக்கார மனிதர் எவ்வளவு பணம் சேர்த்தாலும், மன நிம்மதியின்றி தவித்தார். நிம்மதியைத் தேடி பக்கத்து ஊரில் இருக்கும் ஒரு குருஜியை போய் சந்தித்தார். தனது வருத்தங்களை பதிவு செய்தார். அதனை கேட்ட குரு உங்களிடம் உள்ள 50 ரூபாய் எடுத்து பிச்சைக்காரரிடம் கொடுங்கள். பிறகு மறைவாய் இருந்து அந்த பணத்தை அவன் என்ன செய்கிறான்? என்று பார்த்து விட்டு வாருங்கள் என்று கூறினார். அதேபோல அவரும் செய்தார். அந்த பிச்சைக்காரர் அந்த பணத்திற்கு சில போதை பொருள்களை வாங்கி பயன்படுத்தி தன் உடல் நலத்தை கெடுத்துக் கொண்டு இருந்தார். மிகவும்

வேதனையோடு வந்து இந்த கருத்தை குருவிடம் எடுத்துச் சொன்னார். பிறகு குரு தன்னுடைய இல்லத்தில் இருந்த 50 ரூபாய் எடுத்து அந்த செல்வந்தரிடம் கொடுத்து இதை போய் வேறொரு பிச்சைக்காரனிடம் கொடுங்கள் என்று கொடுத்து அனுப்பினார். அவரும் அவ்வாறே செய்து அவன் என்ன செய்கிறான்? என்று பார்த்தார். அந்த பிச்சைக்காரன் அந்த பணத்திற்கு அரிசி, காய்கறிகள் எல்லாம் வாங்கிக் கொண்டு சென்று தெருவோரத்தில் உள்ள தன் குடும்பத்தோடு பகிர்ந்து உண்டான். என்பதை குருவிடம் சொன்னார்.

அப்பொழுது குரு, முதலில் உன்னுடைய பணம் நீ பலரை துன்புறுத்தி சம்பாதித்த அந்த பணம் வீணாக செலவழிக்கப்பட்டது. இரண்டாவது உண்மையாக உழைத்து பெறப்பட்ட பணம் நல்ல பலனை தந்தது. அதுவே நிம்மதியான வாழ்வுக்கு அச்சாரம் என்று எடுத்துரைத்தார். உண்மை நிலையை உணர்ந்து கொண்ட அந்த பணக்கார மனிதர் ஏமாற்றி சேர்த்த பணத்தை உரியவரிடம் ஒப்படைத்தார். உண்மையாக உழைத்து சம்பாதிக்க ஆரம்பித்தார். மன நிம்மதியையும் பெற்றார்.

ஆம்! இனியவர்களே உழைப்பு ஒன்றே நமக்கு உயர்வு தரும். உண்மை உள்ளத்தவராய், நன்மையை விரும்புவார்களாய், கள்ளமற்ற அன்பை காணும் மனிதர்களிடத்தில் விதைப்போம்.

எந்த சிறிய செயலானாலும் சரி, பெரிய செயலானாலும் சரி அவற்றின் குறிக்கோள் முழுவதும் முடிவில் மன மகிழ்ச்சியை தருவதாக இருக்க வேண்டும். – அரிஸ்டாட்டில்

இறை வல்லமையும் அருளும் நம் உள்ளங்களை ஆளட்டும்...





# திருக்குறளின் தேனமுதம்



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm

## குறள் 88

பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்

## குறள் விளக்கம்

விருந்தினரை ஓம்பி அந்த வேள்வியில் ஈடுபடாதவர் பொருள்களை வருந்திக்காத்துப் (பின்பு இழந்து) பற்றுக் கொடு இழந்தோமே என்று இரங்குவர்

## சிந்தனை

நண்பர் ஒருவர் இருந்தார். அவரிடம் நிறைய செல்வம் இருந்தது. அவர் ஏழைகள் சிறுவர்கள் படிப்பதற்குகூட உதவி செய்யமாட்டார். எந்த விருந்தினரும் அவரது வீட்டில் உணவருந்த முடியாது, வருகின்றவர்களை உடனடியாக திருப்பி அனுப்பிவிடுவார். ஒருநாள் அவருடைய பொருட்கள் எல்லாம் திருட்டுபோய்விட்டது. வருந்தினார். ஏழைகளுக்கோ, நண்பர்களுக்கோ கொடுத்து உபசரித்திருக்கலாமே என்று அப்போது எண்ணினார்.

இதுபோன்றுதான் வள்ளுவர் கூறுகிறார். விருந்தோம்பல் என்பது ஒரு யாகம். அது ஒரு வேள்வி. நம்மிடம் வருகின்றவர்களுக்கு, அந்நியர்களுக்கு உதவிசெய்வது ஒரு வேள்வி போன்றது. ஆனால் அதைச் செய்யாமல் இருக்கின்றவர்கள் தங்களது பொருட்களை இழக்கின்றபொழுது, மிகுந்த வருத்தமடைவர். இழந்த பொருட்களைக் கொண்டு நற்காரியங்கள் செய்திருக்கலாமே என்று பின்னாளில் வருந்துவர்.

லூக்கா 12ம் அதிகாரத்தில் அறிவற்ற செல்வந்தன் தனக்குத் தானே 'உனக்குப் போதிய செல்வம் இருக்கிறது, மகிழ்ச்சியாயிரு' என்பான். ஆனால் ஆண்டவர், 'இன்றிரவே நீ இறக்கபோகிறாய் என்பார். அப்பொழுது அவன் தான் சேர்த்துவைத்த செல்வம் அனைத்தும் வீணே என்று வருந்துவான். இது போன்று தன்னிடம் இருக்கின்ற செல்வத்தைப் பயன்படுத்தாமல் இருந்தோமென்றால் அது இருக்கும்போதும் நமக்கு மகிழ்ச்சி தராது. மேலும் அதை இழக்கும் போதும் மிகுந்த துன்பம் உண்டாகும்.